NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 18 October 2019

### பெற்றோரின் சொத்து நிலவரம் தொடர்பில்

# ஆய்வு: பிள்ளைகளிடையே தாக்கத்தை ஏற்படுத்தும்

பெற்றோர் இருக்கும் வீட்டு வகையைப் பொறுத்து அடுத்த தலைமுறையின் பொருளியல் நிலை அமையலாம் என்று சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் நடத்திய புது ஆய்வு ஒன்று கண்டறிந்துள்ளது.

நாட்டிலுள்ள வீடமைப்புக் கொள்கைகளுடன் சிங்கப்பூரில் பெற்றோர்கள் வசிக்கும் வீட்டு வகை, பிள்ளைகளின் பொருளியல் அந்தஸ்தின் மீது ஒரு குறிப்பிடத்தக்க அளவு தாக்கத்தை ஏற்படுத்தும் என்று ஆய்வு முடிவுகள் கூறுகின்றன.

குறைந்த வருமானக் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள், வீடமைப்பு வசதி என்று வரும்போது மேல்நோக்கிய முன்னேற்ற நிலையில் உள்ளனர்.

வீவக வட்டாரங்களில் இவர்களின் பள்ளிகள் அமைந்துள்ளதால் இந்த முன்னேற்றம் பொதுவாகவே உள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆனால், நடுத்தர வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு ஏற்படும் நிலை வேறு. தங்களின் பெற்றோர் வசிக்கும் வீட்டு வகையைக் காட்டிலும் அவர்களின் பிள்ளைகள் சற்று பின்தங்கியே உள்ளனர்.

அரசு வழங்கும் உதவி மானியத் திட்டங்களால் நடுத்தர வருமானக் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள், மலிவான பொது வீடமைப்பு போதும் என்று திருப்தி அடைகின்றனர்.

இதற்கிடையே பொருளியல் அடிப்படையிலான வசதிபடைத்த முதல் 20 விழுக்காட்டு குடும்பங்களில் உள்ள பிள்ளைகள், முடிந்தவரை தங்கள் பெற்றோரின் பொருளியல் நிலைக்கு ஒப்ப தங்களைத் தக்கவைத்துக்கொள்கின்றனர். ஆனால் பெற்றோரைவிட மேம்பட்ட பொருளியல் நிலைக்குச் செல்ல இவர்கள் சிரமப்படுவதாகவும் ஆய்வு கண்டறிந்துள்ளது.

தேவைக்கு ஏற்ப கட்டித்தரப்படும் வீட்டுத் திட்டம், திருமணமான பிள்ளைகளுக்கான முன்னுரிமைத் திட்டம் போன்ற பெருமளவிலான திட்டங்கள் தொடர்பில் கிடைத்த தரவுகளின் அடிப்படையில் தலைமுறைகளுக்கு இடையே மேல்நிலைக்குச் செல்லும் போக்கைக் கொண்டு பொது கொள்கையின் பாதிப்பு ஆராயப்பட்டது.

நாட்டின் கொள்கைகளாலும் குடியிருப்பு வட்டாரங்களின் தனித்தன்மை வாய்ந்த அம்சங்களாலும் கூட தலைமுறைகளுக்கிடையே உள்ள வீடமைப்பு சொத்து முன்னேற்றம் வேறுபடுவதாக ஆய்வு கூறுகிறது. உதாரணத்திற்கு பொங்கோல், பாசிர் ரிஸ், ஜூரோங் வெஸ்ட் போன்ற புதிய வட்டாரங்களில் பொருளியல் முன்னேற்றம் அதிகமாகவே காணப்பட்டதாம்.

எதிர்காலத்தில் இளம் சிங்கப்பூரர்களின் நிலை எவ்வாறு அமையும் என்பதைக் கணிக்க தலைமுறைகளுக்கிடையே உள்ள சொத்து முன்னேற்றத்தைப் புரிந்துகொள்வது அவசியம் என்று ஆய்வை மேற்கொண்ட பேராசிரியர் சுமிட் அகர்வால் தெரிவித்தார். சாதகமான பொதுக் கொள்கைகளால் தலைமுறைகளுக்கிடையே சொத்து முன்னேற்றம் ஏற்படும் என்றும் திரு அகர்வால் குறிப்பிட்டார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.